**நிவிதிகல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிவிதிகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் நிவிதிகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1(ஊ) பந்தி தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

<table>
<tr><th></th><th>கணக்காய்வு அவதானிப்புக்கள்</th><th>சபையின் கருத்துரை</th><th>சிபார்சுகள்</th></tr>
<tr><td>(அ)</td><td>மேற்கொள்ளப்பட்ட பெறுமதி ரூபா 320,889 ஆன அபிவிருத்தி வேலைகளை கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஒப்பந்த தொகையான ரூபா 403,909 இனை கணக்கீடு செய்த காரணத்தால் காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தளுக்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கு ரூபா 115,134 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.</td><td rowspan="3">2022 ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதாக.</td><td>சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.</td></tr>
<tr><td>(ஆ)</td><td>நிலையான சொத்துக்கள் மேம்படுத்தும் பெறுமதி ரூபா 1,139,065 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.</td><td>நிலையான சொத்து மேம்படுத்தும் பெறுமதியை மூலதனமாக்க வேண்டும்.</td></tr>
<tr><td>(இ)</td><td>இயந்திர மற்றும் உபகரணங்கள் கொள்வனவு பெறுமதி ரூபா 1,354,500 இனை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.</td><td>சொத்துக் கொள்வனவு பெறுமதியை சரியாக இனங்கண்டு மூலதனமாக்க வேண்டும்.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் ஏல விற்பனை செய்யப்பட்ட வாகனங்களில் கிரயம் ரூபா 2,202,800 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் சரியாக கணக்கீடு செய்வதாக. | ஏல விற்பனை செய்யப்பட்ட வாகனங்களில் கிரயத்தை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்ற வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் ஆரம்ப காணி மற்றும் கட்டிடங்கள் மீதியினுள் சபைக்கு சொந்தமான ரூபா 23,083,314 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் உள்ளடங்கியிருக்கவில்லை. | | காணி மற்றும் கட்டிடங்கள் மீதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமான மிகை ஒதுக்கீடு ரூபா 235,917 இனை மற்றும் 2020 ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 1.4.1 (ஓ) பந்தி மூலம் சுட்டிக்காட்டியிருந்த நீதிமன்ற தண்டப்பண வருமான மிகை ஒதுக்கீடு ரூபா 141,720 இனை சரிசெய்யாத காரணத்தால் நீதி மன்ற தண்டப்பண வருமானக் கணக்கு ரூபா 377,637 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | மிகை ஒதுக்கீட்டு பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,227,262 ஆனதுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம ரூபா 11,323,055 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 04 அரச நிறுவனங்களிக்குரிய ரூபா 45,852 ஆன நிலுவையொன்று மற்றும் 596 தனியார் அலகுகளிற்குரிய ரூபா 1,207,300 நிலுவையாக 600 வீதவரி அலகுகளிற்குரியதாக ரூபா 1,253,122 ஆன நிலுவையொன்று அறவிட வேண்டியதாக இருந்தது. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக வருமானம் அறவிட முடியாதிருந்ததுடன், ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமலிருந்தது எனவும் எதிர் காலத்தில் நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை மீதியை அறவிட சட்டத்தின் பிரிவுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| இயற்கை பசளை கொட்டிலுக்கு இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்யும் பெறுகை மட்டுப்படுத்தப்பட்ட விலைமனு கோரி மேற்கொண்டிருந்ததுடன், அதற்காக 21 நாட்கள் காலமொன்று வழங்க வேண்டிய போதும், 12 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. விலைமனு திறக்கும் திகதியில் மனுதாரருக்கு சமூகமளிக்கும் சந்தர்ப்பங்கள் விடுபட்டிருந்தது. அதன் காரணமாக பெறுகையின் நோக்கமொன்றான ‘‘மதிப்பீட்டின் மற்றும் தெரிவு செய்யும் செயல் ஒழுங்கின் வெளிப்படை தன்மை மற்றும் நிலையான தன்மையை உறுதி செய்தல்‘‘ எனும் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. 2021 ஒக்தோபர் 14 ஆம் திகதிய 609 இலக்க கட்டளை மூலம் கட்டளையிட்டு அத்திகதியிலே பெற்றுக் கொண்ட பண்டங்களாவதுடன், ரூபா 1,475,088 ஆன ஹலர் இயந்திரம் மற்றும் ரூபா 580,000 ஆன உக்கலடையும் குப்பைகளை துண்டாக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்து இஸ்தாபித்திருந்த போதும், மும்முக மின்சாரத்தை பெற்றுக் கொள்ளும் வரை விளைவற்று காணப்பட்டன. | அனைத்து நடடிக்கைகளும் ஒரே தினத்தில் நிதிக் கொள்கைகள் செயற்குழு மூலம் மேற்கொள்வதால் விலைகள் திறப்பது தொடர்பாக தனியான அறிக்கை தயாரிப்பதில்லை என. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் வெளிப்படைத் தன்மையுடன் விலைமனு கோரல் மற்றும் மனு திறத்தல் மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் கழிவுகளை ஒன்றுதிரட்ட சபைக்கு சொந்தமான 02 வாகனங்களிற்காக ரூபா 1,063,347 செலவும், 09 ஊழியர்களையும் ஈடுபடுத்தியிருந்ததுடன். அதற்காக ரூபா 2,037,284 ஆன செலவொன்றாக | புதிய கட்டிடத்தின் வேலைகள் 2022 மார்ச் 22 திகதி பூர்த்தி செய்வதன் காரணமாக குவிக்கப்பட்டிருந்த குப்பைகளை | கழிவுகளை மீள்சுழற்சி செயன்முறையை விரைவில் ஆரம்பித்து கழிவு பிரச்சினையை தீர்த்துக் கொள்ள |

வருடாந்தம் கூட்டுத் தொகை ரூபா 3,100,631 செலவிடப்பட்டிருந்த போதும் இயற்கை பசளை கருத்திட்டத்தை நிர்மாணிக்க கொள்வனவு செய்திருந்த காணியின் ஒரு பகுதியில் அக்கழிவுகள் குவிக்கப்பட்டிருந்தாக கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன், கணக்காய்வு திகதிய 2022 மார்ச் 10 திகதயளவிலும் மின்சார வசதிகளை பெற்றுக் கொள்ளாத காரணத்தால் இயற்கை பசளை உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்க சபைக்கு இயலாதிருந்தது.

அக்கட்டிடத்தினுள் வைக்கப்பட்டுள்ளதாகவும், புதிதாக ஒன்று சேறும் குப்பைகளை முறையாக அவ்விடத்தில் வெளியிடுவதாக.

தடுத்து வேண்டும்.